# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8092831

C

1. District : Tiruvannamalai PS: Vigilance & Anti Corruption Tiruvannamalai Detachment Year: 2019 FIR No.: 05/2019 Date: 01/03/2019
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : Prior to 1530 Hrs on 28/02/2019
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 01/03/2019 Time : 1700 Hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written Complaint
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 2 Km South
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Taluk Supply Office Tiruvannamalai
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Thiru T. Krishnamoorthy (b) Father's/Husband's Name : P. Thulasi
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 12/05/1971 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Inspection cell Officer (g) Address : Inspection cell Office, Vellore and Tiruvannamalai Districts Vellore -9
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. K. Sumathi W/o Kumar, Special Tahsildar, (Civil supplies) Tiruvannamalai Taluk Tiruvannamalai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

... separate sheet if necessary)

... மேல் இணைக்கப்பட்டுள்ள தனித் தாளில் இணைக்கவும்)

—

—

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

... mentioned at Item No.2 registered the case ... Rank ... to take up the Investigation / Refused ... on point of jurisdiction.

... பதவி ... நிலை ...

... correctly recorded and a copy given to the Complainant / ...

Signature ... Signature of the Officer in-charge, Police Station

காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

01/03/2019

R ARULPRASAD

Inspector of Police

Vigilance and Anti Corruption

Tiruvannamalai Detachment

1319

01/03/2019 at 1800 Hrs

பணிந்து அனுப்பப்படுகிறது:

இன்று 01.03.2019-ந் தேதி மாலை 17.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்த போது அனுப்புநர், திரு.து.கிருஷ்ணமுர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை.நாள்: 01.03.2019 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு சோதனை – திருவண்ணாமலை மாவட்டம், நான் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக உள்ளேன். கடந்த 28.02.2019-ஆம் தேதி திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள திருவண்ணாமலை வட்ட விநியோக அலுவலகத்தில் பொது விநியோக கடையில் பணிபுரியும் விற்பனையாளர்கள் மாதாந்திர உணவு பொருட்கள் ஒதுக்கீடு பெறுவதற்காக மாதாந்திர உணவு பொருட்கள் ஒதுக்கீடு கூட்டம் நடைபெறுவதாகவும், அச்சமயத்தில் திருவண்ணாமலை வட்ட விநியோக அலுவலர் அவர்கள் நியாய விலை கடை விற்பனையாளர்களிடம் உணவு பொருட்கள் ஒதுக்கீட்டிற்கு தகுந்தவாறு லஞ்சம் பெறுவதாக வந்த தகவலின் அடிப்படையிலும், மேலும் வரும் பொதுமக்களிடம் புதிய குடும்ப அட்டை வழங்க பரிந்துரை செய்வதற்கு நேரடியாகவும் மற்றும் இடைத்தரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும் கையூட்டு பெறுவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலையொட்டி, அந்த தகவலை திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் அவர்களுக்கு தெரிவித்தும், நான் வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் இருந்து வந்து கொண்டிருப்பதாகவும், அதனால் தாமதம் இல்லாமல் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களிடம் இரண்டு அரசு சாட்சிகளை ஏற்பாடு செய்துகொண்டு திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்தின் அருகில் உள்ள திருவண்ணாமலை வட்ட விநியோக அலுவலகத்தில் திடீர் தணிக்கை செய்யுமாறும், நானும் விரைவில் வந்துவிடுவதாக சொன்னதின் பேரில் அரசு சாட்சிகள் 1.திரு.ந.சீனிவாஸ்குமார், வயது 36, கைத்தறி ஆய்வாளர், கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குனர் அலுவலகம், திருவண்ணாமலை. 2.திரு.கீ.மா.கோபு வயது 43, உதவியாளர், தோட்டக்கலை துணைஇயக்குனர் அலுவலகம், திருவண்ணாமலை ஆகியோரை ஏற்பாடு செய்து கடந்த 28.02.2019-ஆம் தேதி பகல் 1530 மணிக்கு திருவண்ணாமலை வட்ட விநியோக அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அதே சமயத்தில் நானும் திருவண்ணாமலை வட்ட விநியோக அலுவலகத்திற்கு எனக்கு வழங்கப்பட்ட அரசு வாகனத்தில் வந்து சேர்ந்தேன். அதன் பின்னர் மேற்படி அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு திருவண்ணாமலை வட்ட விநியோக அலுவலர் திருமதி.கே.சுமதி அவர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் தங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டு

தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காட்டப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது திருமதி.கே.சுமதி, வட்ட விநியோக அலுவலர், திருவண்ணாமலை, 2. திரு.பி.விஜய், வட்ட விநியோக அலுவலரின் வாகன ஓட்டுநர், 3. திரு.எஸ்.வினோத்குமார், மாவட்ட மேலாளர், Oasis Cybernetics Private Limited, சென்னை, 4. திருமதி.ஜி.அமுதவள்ளி, தற்காலிக ஊழியர்(தனிநபர்) மற்றும் 5. திரு.எம்.வீரமணி, தற்காலிக ஊழியர்(தனிநபர்), ஆகியோர் பணியில் இருந்தார்கள். மேலும் பொது விநியோக கடை விற்பனையாளர்கள் சுமார் 30 நபர்கள் அலுவலகத்தில் இருந்தனர். மேற்படி அலுவலர்களை சோதனையிட, வட்ட விநியோக அலுவலர் திருமதி.சுமதி அவர்களை பெண் காவலர் 2261 செல்வி.எஸ்.ரம்யா அவர்களின் மூலம் சோதனையிட அவரது கைப்பையில் ரு.1,180/- இருந்தது, மேற்படி கைப்பையில் இருந்த சிறிய மணிபர்சில் ரு.680/- இருந்தது. மேலும் கைப்பையில் இருந்த வெள்ளை நிற கவரில் H.H.17 பெரியகிளாம்பாடி PACCS Rs.600/- என்று எழுதப்பட்டு அதனுள் ரூ.600/- பணம் இருந்தது. மேற்படி பணத்திற்கான முகாந்திரம் கேட்க அவரால் சரியான முகாந்திரம் கூற முடியவில்லை, அதனால் மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர் வருவாய் ஆய்வாளரின் மேஜையின் அருகே தெற்கு நோக்கி அமைந்த கம்ப்யூட்டரிடம் திரு.வீரமணி வயது.23 த/பெ முருகன் என்பவர் பணி செய்து கொண்டிருந்தார், அவரை விசாரிக்க தான் தற்காலிகமாக வேலை செய்து வருவதாகவும், அவர் கடந்த 2 வருடமாக வேலை செய்து வருவதாகவும், தனக்கு ஒரு நாளைக்கு ரூ.200/- கூலியாக வட்ட விநியோக அலுவலர் அவர்கள் தருவதாகவும் சொன்னவரை சோதனையிட அவரின் மேல் பக்க சட்டை பாக்கெட்டில் ரூ.2,800/- இருந்தது. மேற்படி பணத்திற்கான முகாந்திரம் கேட்க அவரால் சரியான முகாந்திரம் கூற முடியவில்லை, மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் வட்ட விநியோக அலுவலர் அறையில் வடக்கு பக்கம் அமைந்துள்ள அறையில் கடைசியாக இருந்த மேஜையில் அமர்ந்து வேலை பார்த்துக்கொண்டிருந்த திருமதி.ஜி.அமுதவள்ளி வயது.42 த/பெ கோவிந்தசாமி என்பவரை விசாரிக்க தான் தற்காலிக ஊழியர் என்றும் அவர் சுமார் 5 வருடமாக இவ்வலுவலகத்தில் வேலை செய்து வருவதாகவும், நாளொன்றுக்கு ரூ.200/- கூலியாக வட்ட விநியோக அலுவலர் அவர்கள் தருவதாகவும் சொன்னவரை பெண் காவலர் 2261 செல்வி.எஸ்.ரம்யா அவர்களின் மூலம் சோதனையிட அவரின் கைப்பையில் ரு.1,500/-, அதிலிருந்த சிறிய மணிபர்சில் ரு.3,320/-ம் இருந்தது. மேற்படி பணத்திற்கான முகாந்திரம் கேட்க அவரால் சரியான முகாந்திரம் கூற முடியவில்லை, மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. அங்கிருந்த வாகன ஓட்டுநர் திரு.பி.விஜய் அவர்களை சோதனையிட அவரிடம் பணம் ஏதும் இல்லை. அங்கு பணியில் இருந்த தனியார் நிறுவன மாவட்ட மேலாளர் திரு.வினோத்குமார் அவர்களை தணிக்கை செய்ய அவரிடம் ரு.1,670/- இருந்தது, மேற்படி பணத்தை பற்றி முகாந்திரம் கேட்க தகுந்த முகாந்திரம் கூறியதால், மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் திருவண்ணாமலை வட்ட விநியோக அலுவலகத்தினை

சோதனை செய்யப்பட்டது. மேற்படி சோதனையின் போது தனிநபர் திருமதி.அமுதவள்ளி உட்கார்ந்து வேலை செய்து கொண்டிருந்த மேஜையின் வடக்கு பார்த்த இருந்த அலமாரியினை தணிக்கை செய்த போது மேற்படி அலமாரியின் இரண்டாவது தடுப்பில் வெள்ளை கவர்களில் பொது விநியோக கடைகள் அமைந்துள்ள ஊர்களின் பெயர்களை தனித்தனி கவர்களில் எழுதி வைக்கப்பட்டிருந்தது. மேற்படி கவர்களை பிரித்து பார்க்க அதில் ரு.100/-, ரு.500/- தாள்களாக ஆகமொத்தம் ரு.7,600/- இருந்தது. அதைப்பற்றி அங்கிருந்த திருமதி.அமுதவள்ளியை விசாரிக்க மேற்படி பணம் பொதுவிநியோக கடை விற்பனையாளர்கள் வட்ட விநியோக அலுவலருக்கு வழங்கிய பணம் என்றும் மேற்படி பணத்தை தான் வாங்கி அங்கு வைத்திருப்பதாகவும், வட்ட விநியோக அலுவலர் வீட்டிற்கு செல்லும் போது மேற்படி பணத்தை கேட்டு பெற்றுச்செல்வதாகவும் கூறினார். மேற்படி பணம் மற்றும் கவர்கள் கைப்பற்றப்பட்டது. பின்னர் வருவாய் ஆய்வாளர் அவர்களின் மேஜையின் கீழே ரு.160/- கேட்பாரற்று கிடந்தது. அதைப்பற்றி விசாரிக்க யாரும் மேற்படி பணத்திற்கு உரிமை கோராததால் மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. திருவண்ணாமலை வட்ட விநியோக அலுவலகத்தில் பணிபுரியும் தனிவட்டாட்சியர் (குடிமைபொருள்கள்) மற்றும் இதர பணியாளர்களிடமிருந்தும் அலுவலக அலமாரியிலிருந்தும் ஆகமொத்தம் ரு.17,840/- கைப்பற்றப்பட்டது. மேலும் திருவண்ணாமலை வட்ட விநியோக அலுவலகத்தில் பொது விநியோக கடையின் விற்பனையாளர்கள் மாதாந்திர உணவு பொருட்கள் ஒதுக்கீடு பெறுவதற்காக, மாதாந்திர உணவு பொருட்கள் ஒதுக்கீடு கூட்டத்தில் பங்கு பெறுவதற்காக வந்த பொதுவிநியோக கடையின் விற்பனையாளர்களை விசாரிக்க அவர்கள் மாதாந்திர கூட்டத்தின்போது உணவு பொருட்கள் ஒதுக்கீடு பெறுவதற்காக வட்ட விநியோக அலுவலர் திருமதி.சுமதி அவர்கள் தங்களிடம் பணம் பெறுவதாக சொல்லி அவருக்கு இலஞ்சமாக கொடுக்க இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தனர் அதன் விவரம்.

| வ. எண். | விற்பனையாளர் பெயர், மற்றும் விலாசம் | சோதனையிட அவர்களிடம் இருந்த பணம் | வட்ட விநியோக அலுவலருக்கு கொடுக்க வைத்திருத்ததை அவர்களாக ஆஜர் செய்த | திரும்ப ஒப்படைத்த பணம் |
|---|---|---|---|---|
| 1. | திரு.கோ.பெருமாள் (51) த/பெ.பொன்னுசாமி, நெ.108, கீழ்தெரு, பெருமணம் கிராமம், திருவண்ணாமலை வட்டம், (கைபேசி எண்.8438543839) | ரு.33,200/- | 400/- | ரு.32,800/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | பூ.குணசேகரன் (57),<br>த/பெ.பூங்காவணம்,<br>காட்டாம்பூண்டி கிராமம்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9488436410) | ரு.500/- | ரு.200/- | ரு.300/- |
| 3. | திரு.தி.சுரேஷ் (39),<br>த/பெ.திருவிக்ரமன்,<br>தளயாம்பள்ளம் கிராமம்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9487319779) | ரு.720/- | ரு.200/- | ரு.520/- |
| 4. | திரு.பெ.மணி (44)<br>த/பெ.பெருமாள்,<br>தளயாம்பள்ளம் கிராமம்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9786743806) | ரு.450/- | ரு.200/- | ரு.250/- |
| 5. | திரு.கோ.தெய்வசிகாமணி (37),<br>த/பெ.கோவிந்தன்,<br>காடகமான் கிராமம்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9787345354) | ரு.500/- | ரு.200/- | ரு.300/- |
| 6. | திரு.அ.சுப்பிரமணி (55),<br>த/பெ.அய்யாகண்ணு,<br>துரிஞ்சாபுரம் கிராமம்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9751048727) | ரு.1600/- | ரு.100/- | ரு.1500/- |
| 7. | திரு.ரே.வெங்கடேஷ் (42),<br>த/பெ.ரேணு,<br>நடுப்பட்டு கிராமம்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9787700522) | ரு.160/- | ரு.100/- | ரு.60/- |
| 8. | திரு.அ.கனகசபை (37),<br>த/பெ.அருணாசலம்<br>அண்டம்பள்ளம் கிராமம்,<br>கீழ்பெண்ணாத்தூர் வட்டம்.<br>(கைபேசி எண்.9787700522) | ரு.58/- | - | ரு.58/- |
| 9. | திரு.சு.பிரேமதேவன் (29),<br>த/பெ.சுப்பிரமணி,<br>ஆண்டியாபள்ளம் கிராமம்,<br>அண்டம்பள்ளம் போஸ்ட்,<br>கீழ்பெண்ணாத்தூர் வட்டம்.<br>(கைபேசி எண்.8870130034) | ரு.3370/- | ரு.300/- | ரு.3070/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | திரு.து.தவமணி (54),<br>த/பெ.துரைசாமி,<br>கீழ்கச்சிராப்பட்டு கிராமம்,<br>மெய்யூர் போஸ்ட்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9788474213) | ரு.400/- | ரு.100/- | ரு.300/- |
| 11. | திரு.இரா.அரங்கநாதன்(42)<br>த/பெ.இராஜி,<br>ஆருத்ராப்பட்டு கிராமம்<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.8012344926) | ரு.610/- | ரு.200/- | ரு.410/- |
| 12. | திரு.ந.தட்சிணாமுர்த்தி(53)<br>த/பெ.நடேசன்,<br>கீழ்கச்சிராப்பட்டு கிராமம்<br>மெய்யூர் அஞ்சல்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9597659322) | ரு.4530/- | ரு.500/- | ரு.4030/- |
| 13. | திரு.ப.முருகன்(50)<br>த/பெ.பழனிமலை,<br>இசுக்கழி காட்டேரி கிராமம்,<br>கீழ்பெண்ணாத்தூர் வட்டம்.<br>(கைபேசி எண்.8098529779) | ரு.650/- | ரு.150/- | ரு.500/- |
| 14. | திரு.மு.சரவணன்(49)<br>த/பெ.முனுசாமி,<br>பண்டிதப்பட்டு கிராமம்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9787414413) | ரு.600/- | ரு.300/- | ரு.300/- |
| 15. | திரு.ஆ.முருகன்(50)<br>த/பெ.ஆறுமுகம்,<br>சு.கம்புபட்டு கிராமம்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9843864584) | ரு.29,230/- | ரு.200/- | ரு.29,030/- |
| 16. | திரு.கு.சேதுபதி சேகர்(52)<br>த/பெ.குமரேசன்,<br>கீழ்செட்டிபட்டு கிராமம்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9994566331) | ரு.4,210/- | ரு.200/- | ரு.4,010/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 17. | திரு.ச.சின்னதுரை(36)<br>த/பெ.சடையன்,<br>வேளையம்பாக்கம் கிராமம்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9047039704) | ரு.1210/- | ரு.200/- | ரு.1010/- |
| 18. | திரு.அ.கிருஷ்ணமுர்த்தி(53)<br>த/பெ.அய்யனார்,<br>நடுப்பட்டு கிராமம்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9751526421) | ரு.1270/- | ரு.200/- | ரு.1070/- |
| 19. | திருமதி.கா.கலைவாணி(31)<br>க/பெ.கார்த்திகேயன்<br>ஆர்திராப்பட்டு கிராமம்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9791252118) | ரு.1120/- | ரு.400/- | ரு.720/- |
| 20. | திருமதி.சு.கீதா(40)<br>க/பெ.சுகுமார்,<br>கல்லேரி<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9786915736) | ரு.1570/- | ரு.500/- | ரு.1070/- |
| 21. | திருமதி.A.அகிலாதேவி(46)<br>க/பெ.ஸ்டாலின்,<br>அரடாப்பட்டு<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.7639476721) | ரு.24,500/- | ரு.500/- | ரு.24,000/- |
| 22. | திரு.செ.முத்துகுமரன்(38)<br>த/பெ.செல்வம்,<br>அரடாப்பட்டு<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9025274400) | ரு.16.790/- | ரு.100/- | ரு.16,690/- |
| 23. | திரு.சி.ஜெயசங்கர்(49)<br>த/பெ.சின்னதுரை,<br>சுக்காம்பாளையம் கிராமம்,<br>திருவண்ணாமலை வட்டம்.<br>(கைபேசி எண்.9442469870) | ரு.1,850/- | ரு.200/- | ரு.1,650/- |
| | ஆக மொத்தம் கைப்பற்றப்பட்ட பணம்: | | 5,450/- | |

28.02.2019- ஆம் தேதி தனி வட்டாட்சியர், (குடிமைபொருள்கள்) திருவண்ணாமலை வட்ட விநியோக அலுவலகத்தில் மொத்தமாக ருபாய்.23,290/- (ரு.17,840 + 5,450/= 23,290/-) கணக்கில் வராத முகாந்திரம் கூற இயலாத பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர் தனி வட்டாட்சியர், (குடிமைபொருள்கள்) திருவண்ணாமலை திருமதி.சுமதி

அவர்களிடம் வருகைப்பதிவேடு கேட்க அவர் எடுத்து ஆஜர் செய்தார் அதை பார்வையிட்டதில் பிப்ரவரி மாதம் 28-ந் தேதியில் தன் பெயருக்கு நேராக தனிவட்டாட்சியர் சுருக்கொப்பம் செய்துள்ளார். மேலும் அதில் வாகன ஓட்டுநர் மேற்படி தேதியில் தன் பெயருக்கு நேராக சுருக்கொப்பம் செய்துள்ளார். தனி வருவாய் ஆய்வாளர் திரு.சிவப்பிரகாசம் அவர்கள் தற்செயல் விடுப்பு என பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வருகைப்பதிவேட்டில் நானும், காவல் ஆய்வாளர் மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோர் கையெழுத்திட்டு மேற்படி பதிவேடுகள் கைப்பற்றப்பட்டது. பின்னர் வருகைப்பதிவேடு தொகுப்பு 2019 மற்றும் காலதாமத வருகைப்பதிவேடு 2019 பற்றி கேட்க அதை தனி வட்டாட்சியர், (குடிமைபொருள்கள்) திருவண்ணாமலை திருமதி.சுமதி அவர்கள் ஆஜர் செய்தார். வருகைப்பதிவேடு தொகுப்பை பார்வையிட பக்கம் 16-ல், 28.02.2019-ஆம் தேதி பதிவு செய்து தனி வட்டாட்சியர் கையொப்பம் செய்திருந்தார். பின்னர் காலதாமத வருகைப்பதிவேட்டை பார்வையிட பக்கம்-9 ல் 28.02.2019-ஆம் தேதி காலதாமதம் எவரும் இல்லை என எழுதி தனி வட்டாட்சியர் கையொப்பம் செய்துள்ளார். மேற்படி இரு பதிவேடுகளை கைப்பற்றி அதில் நானும், காவல் ஆய்வாளர் மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோர் கையெழுத்திட்டு மேற்படி பதிவேடுகள் கைப்பற்றப்பட்டது. பின்னர் 28.02.2019-ஆம் தேதி குடிமைப்பொருள் விற்பனையாளர்கள் ஆய்வு கூட்டத்திற்கு ஆஜரானவர்களின் வருகை பதிவேட்டை கேட்க தனி வட்டாட்சியர் குடிமைப்பொருள் அவர்கள் ஆஜர் செய்தார். அவை 22-பக்கம் கொண்ட தாள்களாக இருந்தன அதை பார்வையிட அதில் கடை எண், ஊர் பெயர், விற்பனையாளரின் பெயர், கைப்பேசி எண் மற்றும் விற்பனையாளரின் கையொப்பம் இருந்தது. அதன் முதல் பக்கத்திலும், கடைசி பக்கத்திலும் நானும், காவல் ஆய்வாளர் மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோர் கையெழுத்திட்டு மேற்படி வருகைப்பதிவேடு கைப்பற்றப்பட்டது. பின்னர் இன்றைய இருதுறை கூட்டு தணிக்கையின் போது குடிமைப்பொருள் கடை விற்பனையாளர்கள் இலஞ்சப்பணம் கொடுத்ததாக எழுதி வைக்கப்பட்டிருந்த தாள் கைப்பற்றப்பட்டது. அதை பார்வையிட அந்த தாளின் மேலே 28.02.2019 என்று எழுதப்பட்ட அதன் கீழே 1.காரியந்தல் PACCS- ரூபாய்.500/- என்றும் வரிசையாக எழுதப்பட்டு வரிசை எண்-11-ல் மங்கலம்-ருபாய்.600/- என்று எழுதப்பட்டிருந்தது. மேற்படி தாளில் நானும், காவல் ஆய்வாளர் மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோர் கையெழுத்திட்டு கைப்பற்றப்பட்டது. பின்னர் 15 எண்ணிக்கையில் வெள்ளை நிற தாளினால் மடித்து செய்யப்பட்டு Stapler Pin போடப்பட்டு அதன் மேல் PACCS அமைந்துள்ள ஊரின் பெயர் போட்டு எழுதப்பட்டிருந்த கவர் மற்றும் கவரில் இருந்து எடுக்கப்பட்ட பணம் பறிமுதல் செய்யப்பட்டது. பின்னர் நான், தனி வட்டாட்சியர் திருமதி.சுமதி அவர்களை விசாரணை செய்து, வாக்குமுலம் பதிவு செய்தேன். பின்னர் திருவண்ணாமலை தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்கள்) திருமதி.சுமதி அவர்களிடம் மேற்படி அலுவலரின் அலுவலகத்திலிருந்து பணம் ருபாய் ரூ.23,290/- பற்றி விளக்கம் கோரியபோது, அவர்களால் சரியான விளக்கம் சொல்ல இயலவில்லை. ஆகவே, மேற்படி கணக்கில் வராத இலஞ்சப்பணம் ரு.23,290/-

விசாரணை சொத்தாக மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை திடீர் சோதனை கடந்த 28.02.2019-ஆம் தேதி மாலை 15.30 மணிக்கு துவங்கி இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த செயல்முறையின் நகல் தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்), வட்ட விநியோக அலுவலகம் திருவண்ணாமலை அவர்களுக்கு வழங்கப்பட்டது. இது சம்மந்தமாக இன்று 01.03.2019-ஆம் தேதி பிற்பகல் 16.00 மணிக்கு திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள திருவண்ணாமலை வட்ட விநியோக அலுவலகத்தில் பொது விநியோக கடையின் விற்பனையாளர்கள் மாதாந்திர உணவு பொருட்கள் ஒதுக்கீடு பெறுவதற்காக நடந்த மாதாந்திர உணவு பொருட்கள் ஒதுக்கீடு கூட்டத்தில் திருவண்ணாமலை வட்ட விநியோக அலுவலர் அவர்கள் நியாய விலை கடை விற்பனையாளர்களிடம் உணவு பொருட்கள் ஒதுக்கீட்டிற்கு தகுந்தவாறும் மற்றும் வரும் பொதுமக்களிடம் புதிய குடும்ப அட்டை வழங்க பரிந்துரை செய்வதற்கு நேரடியாகவும் மற்றும் இடைத்தரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும் கேட்டு பெற்ற கணக்கில் வராத பணம் கையூட்டு என்று கருதப்படும் மற்றும் தக்க முகாந்திரம் கூற இயலாத, சந்தேகத்திற்கிடமான மொத்த பணம் ரூ.23,290/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன். மேற்கொண்டு வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். Sd.XXXX. (திரு.து.கிருஷ்ணமூர்த்தி) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Sir,

Received a complaint today on 01/03/19 at 1700 hrs and registered a case in Tiruvannamalai V&AC Cr.No.5/2019, u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 today on 01/03/2019 at 1730 Hrs Sd(xxxx) இரா.அருள்பிரசாத்,01/03/2019, Inspector of Police, Vigilance and Anti Corruption, Tiruvannamalai Detachment.

Original FIR along with the Original typed complaint of Tr.T.Krishnamoorthy, Inspection Cell Officer, Vellore and Tiruvannamalai Districts is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Tiruvannamalai and a Copy of FIR submitted to the Director, V&AC, Chennai-16.

அருள்பிரசாத்
01/03/2019
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு
திருவண்ணாமலை.